**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 3 March 2015

# தனியார் வீடுகளின் மறுவிற்பனை விலையில் சரிவு

தனியார் வீடுகளின் மறுவிற்பனை விலைகள் ஜனவரி மாதத்தில் சரிந்தன என்று சிங்கப்பூர் குடியிருப்பு விலைக் குறியீடு மதிப்பீட்டு அறிக்கை தெரிவித்தது.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் சொத்துச் சந்தை ஆய்வுக் கழகம் தொகுத்து நேற்று வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், ஜனவரியில் ஒட்டுமொத்த விலைகள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தைக் காட்டிலும் 1.6 விழுக் காடு சரிந்தது என்றும் டிசம்பர் மாதத்தின் விலை நவம்பர் மாதத்தைக் காட்டிலும் ஒரு விழுக்காடு சரிந்தது என்றும் கூறப்பட்டது.

சிறிய வீடுகளைத் தவிர்த்த மத்திய பகுதியில் உள்ள வீடுகளின் விலையால்தான் 1.9 விழுக்காடு சரிவு ஏற்பட்டது. சிறிய வீடுகளைத் தவிர்த்த மத்திய பகுதி அல்லாத இடங்களில் உள்ள வீட்டு விலை டிசம்பர் மாதத்தைக் காட்டிலும் ஜனவரியில் 1.4 விழுக்காடு சரிந்தது.

507 சதுரஅடி பரப்பளவு கொண்ட சிறிய வீடுகளின் விலையும் 0.6 விழுக்காடு வீழ்ச்சி கண்டது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.